**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்**
**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG**
**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG**

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 41-2020*

கடந்தவாரம் இலையுதிர்கால விடுமுறையை உடல்நலத்தில் கவனம்கொண்டு சிறப்பாகக் களித்திருப்பீர்கள் என நம்புகின்றோம்.

## கல்வி

கடந்தவாரங்கள் போன்று வழங்கப்பட்ட நேரத்தில் அதே விதிமுறைகளுடன் பாடசாலை நடைபெறும்.

**புதிய திட்டம் ஒன்றை எமது மாணவர்களின் நன்மைகருதி நாம் இவ்வாரம் முதல் நடைமுறைக்குக் கொண்டுவரமுயன்றுள்ளோம்.**

1. *நோர்வேஜிய பாடசாலைப் பாடங்களிற்கான உதவிப்பாடத்திட்ட (Leksehjelp) வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் 12:45-14:00 வரை நடைபெறும். இவ்வுதவி தேவையான மாணவர்களின் பெயர் விபரங்களை எமக்கு மின்னஞ்சலில் 09.10.2020 இற்கு முன்னதாகப் பதிவுசெய்யவும். இவ்வகுப்புக்களை வழிநடாத்த முன்வந்திருக்கும் ஆசிரியர்கள் நோர்வேஜியப் பாடசாலையில் ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.*

## கலை

நவராத்திரி விழா 24.10.2020 சனிக்கிழமை அன்று தற்போதைய விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.முழுவிபரங்கள் அடுத்த வாராந்தத் தகவலினூடாக அறிவிக்கப்படும்.

சங்கீதக் கலைவகுப்புகள் நடனக் கலைவகுப்புகள் வழமைபோல் தமிழ் வகுப்புக்கள் முடிவடைந்தவுடனும் தற்போதய விதிமுறைகளுக்கமையவும் நடைபெறும்.

## பெற்றோர்குழுத்தெரிவு

இவ்வாரம் பெற்றோர்குழுவின் பொறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அடுத்தவார வாராந்தத் தகவலினூடாக யார் பொறுப்பேற்றுள்ளார்கள் என்ற விபரம் அறியத்தரப்படும்.

**அனைத்துவளாக ஆண்டுக்கூட்டம் 18.10.2020 அன்று நடைபெறும்.**

பாடசாலை நேரம்

*சனிக்கிழமை*

1. சிறுவர் - மழலையர் - ஆரம்பம் - 09:30-12:00 (மேல் கட்டடம்)
2. 1ம் வகுப்பு - 4ம் வகுப்பு வரை - 09:30-12.20 (மேல் கட்டடம்)
3. 5ம் வ. - 11ம் வ.-வரை (வளர்பிறை உட்பட) - 09.30-12.30 (கீழ் கட்டடம்)
4. நடனம் (மாணவர்கள் அழைத்துச்செல்லப்படுவர்) 12:10-13:40 (மேல் கட்டடம்)
5. சங்கீதம் (மாணவர்கள் அழைத்துச்செல்லப்படுவர்) 12:40-13:45 (மேல் கட்டடம்)
6. வளர்பிறை வகுப்பு வெள்ளிக்கிழமைகளிலும் 18:45-20:45 (கீழ் கட்டடம்)

*மாணவர்களின் சந்திப்பு நேரம்: 09.15 - 09.25*

வழங்கப்பட்ட அனைத்து விதிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்கும்வண்ணம் அன்போடு வேண்டுகின்றோம்.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**
**தமிழை வளர்க்கப்**
**பணிபுரிவோம்!**